**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**<u>அசல் வழக்கு எண். 50 /2021</u>**

2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.
(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).
நாள் : 12 .02.2025
பி.வா.சா.: DW1–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமேஸ்வரி | தந்தை/கணவர் பெயர் | : | பாலசுப்பிரமணியம் |
| கிராமம் | : | அகிலாண்டபுரம், தாளக்குடி, திருச்சி மாவட்டம். | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | 70 | தொழில் | | |

<u>முதல்விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 1– ம் பிரதிவாதி ஆவேன். நான் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எங்களது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. ஜெயலெட்சுமி இறப்பு சான்று அசல் **பி.வா.சா.ஆ.1 ஆகவும்,**
2. ஜெயலெட்சுமி என்பவரின் வாரிசு சான்று அசல் **பி.வா.சா.ஆ.2 ஆகவும்,**
3. 1–ம் பிரதிவாதி பெயரிலான பட்டா தேதி 08.03.2021 கணினி நகல் **பி.வா.சா.ஆ.3 ஆகவும்,**
4. 1ம் பிரதிவாதி காளிதாஸ் என்பவருக்கு ஆவண எண். 2624/2022 ல் எழுதி கொடுத்த சுத்தக்கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4 ஆகவும்,**
5. 1–ம் பிரதிவாதி காளிதாஸ் என்பவருக்கு ஆவண எண். 2247/2023 ல் எழுதி கொடுத்த சுத்தக்கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.